R4818

THE RANSOM AND ITS APPLICATION TO ALL MANKIND
மீட்கும் பொருளும் அனைத்து மனுக்குலத்திற்கும், அதன் பிரயோகமும்

"மீ ட் கு ம் பொ ரு ள்" எ ன் பது ம னு க் கு ல த் தி ன் விலைக்கிரயத்துக்கும், அந்த விலைக்கிரயத்தைக் கொண்டு மனுக்குலத்தை மீட்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது. இந்த வார்த்தையின் இரண்டு பயன்பாட்டைக் குறித்து விளக்கத்திற்கு இரண்டு வேத வாக்கியங்களை நாங்கள் கொடுக்கிறோம். (1) "எல்லாரையும்மீட்கும்பொருளாக தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே; இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கி வருகிறது." (1 தீமோத்தேயு 2:6) (2) "அவர்களை நான் பாதாளத்தின் வல்லமைக்கு நீங்கலாக்கி மீட்பேன்." (ஓசியா 13:14) இந்த இரண்டு வசனங்களில் மீட்கும் பொருள் என்பதின் இரண்டு பயன்பாட்டை நாம் காண்கிறோம். வேத வாக்கியங்களில் மீட்கும் பொருள் என்ற வார்த்தை "மீட்டுக்கொள்" என்ற அர்த்தத்திலும் அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது. உண்மையிலேயே இரண்டு வார்த்தைகளும் விலை கொடுத்து வாங்கும் கருத்தோடு இணைந்திருக்கிறது. மீட்டுக்கொள்ளுதல் என்பது திரும்பி வாங்குதல் ஆகும். மீட்கும் பொருள் என்பது 1தீமோத்தேயு 2:6இல் பயன்படுத்தப்பட்டது போல சரியான விலை கொடுத்து வாங்குதல் ஆகும்.

வேதாகமம் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மரணத்தை விலை கொடுத்தல் என்ற பொருளில் சில சமயங்களில் பேசுகிறது. நமது கர்த்தராகிய இயேசு தம்மைத் தாமே மீட்கும் பொருளாக கொடுத்தார் என்று வேத வாக்கியம் கூறுகிறது. (மத்தேயு 20:28; மாற்கு 10:45) அவர் யோர்தானில் தம்மை ஒப்புக் கொடுத்தார்; தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்ததை கல்வாரியில் நிறைவேற்றினார். ஆதாமையும் அவரது அனைத்து இனத்தாரையும் மரண தண்டனையிலிருந்து மீட்பதற்கு தேவையான விலைக்கிரயத்தை, மீட்கும் விலையை தமது மரணத்தில் செலுத்தினார்.

மீட்கும் பொருளைக் கொடுப்பதற்கும், மீட்கும் பொருளை பிரயோகிப்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது. விலைக்கிரயம் நமது கர்த்தராகிய இயேசுவில் இருக்கிறது. ஆனால் அதை மற்றவர்களுக்கு கொடுப்பதற்கு முன்பு அதை அவர் பலியாக கொடுக்க வேண்டும். அவர் அந்த விலைக்கிரயத்தை கொடுத்த பிறகு, தேவன் அவரை மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள், பரலோகத்திற்கு நுழைவதற்கு அனுமதித்து, அந்த விலைக் கிரயத்தை பயன்படுத்தும்படி அதிகாரம் கொடுத்தார் என்று வேத வாக்கியங்கள் நமக்கு காண்பிக்கின்றன. வேத வாக்கியங்கள் குறிப்பிடுவது போல அவர் அந்த விலைக்கிரயத்தை இரண்டு விதமாக தேவனுக்கு பலியாக செலுத்துகிறார்.

முதலாவது : அவர் கொடுத்த ஜீவனை, மீட்கும் பொருளின் விலைக்கிரயத்தின் புண்ணியத்தை அவரது சரீரத்தை அமைக்கிற சபைக்கு ஒதுக்கினார். சுத்திகரிக்கப்படுவதற்கு அவரிடம் பாவமில்லை. ஆனால் தேவனுடைய ஏற்பாட்டின்படி கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கங்களாகிறவர்களுக்கு பாவங்கள் உண்டு. அவர்களுக்கு தம்முடைய இரத்தத்தை, மீட்பின் விலையாக அல்லது புண்ணியமாக அவர்களை பாதுகாக்க, மரணத் தண்டனையிலிருந்து விடுவிக்க மட்டுமல்ல, மீட்பின் வேலையில் அவருடன் பங்குதாரராக ஆவதற்கும் உபயோகித்திருக்கிறார். அந்த பலியின் புண்ணியத்தை ஆதாமுக்கோ அவரது பிள்ளைகளுக்கோ உபயோகிக்கவில்லை. ஆனால் நிழலில் உதவி ஆசாரியர்களாக, லேவியர்களாக ஆசாரிய குடும்பத்தின் சகோதரர்கள்மற்றும்ஊழியர்களாக குறிப்பிடப்பட்டவர்களுக்கு மட்டுமே உபயோகிக்கிறார். இரண்டாவதாக : கிறிஸ்து தமது பலியை சகல ஜனங்களின் ச ார்பாக பயன்படுத்துவார். நிழலில் காண்பிக்கப்பட்டபடி, பாவ நிவாரண நாளின் இறுதியில் கிருபாசனத்தின் மேல் இரத்தம் தெளிக்கப்பட் டது.

இரண்டாவதாக ஜனங்களின் மேல் தெளிக்கப்பட்டது. இந்த செயலின் உண்மைப் பொருள் ஆதாமின் தண்டனைக்காக முழுமையாக ஈடு செய்யப்படுகிறதை காண்பிக்கிறது. சகல ஜனங்களும் மேசியாவின் நேரடியான கட்டுப்பாட்டுக்குள் வரும் போது, அவர்கள் பூரணத்திற்கு திருப்பப்படாமல் மரண நிலைமையிலேயே காணப்படுவார்கள். அபூரனுத்தினால் தேவ கோபம் இன்னும் அவர்கள் மேல் இருக்கிறது என்று இன்னொரு வேத வாக்கியம் நமக்கு கூறுகிறது. புது உடன்படிக்கைக்கு கீழாக, பொறுப்பான மத்தியஸ்தராக ஆக்கப்பட்ட மேசியா, மரண தீர்ப்பினால் பலவீனங்களுக்கு கீழாக இருக்கும் "சகல ஜனங்களுக்கும்" பொறுப்பெடுத்துக் கொள்ளுவார். இந்த புது உடன்படிக்கைக்கு கீழாக மேசியாவின் ராஜ்யத்தின் பிரமாணங்களுக்கு கீழ்ப்படிகிற அநேகர் ஜீவனை அளிக்கிறவருடன் உறவுக்குள் வருவார்கள். அது "குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்" என்கிற வசனத்துக்கு இசைவாக இருக்கும். (1 யோவான் 5:12; யோவான் 3:36) இயேசுவை தற்காலத்தில் அவரது சகோதரனாகவோ அடுத்த யுகத்தில் அவரது பிள்ளையாகவோ ஏற்றுக்கொள்ளக்கூடிய சந்தர்ப்பத்தை ஆதாமின் சந்ததியினர் அனைவரும் பெறுவார்கள்.

நாம் மறுபடியும் மீட்கும் பொருள் மற்றும் மீட்கப்பட்டது என்ற வார்த்தைகளுக்கு வருவோம். நமது கர்த்தரைப் பொறுத்தவரை இந்த வார்த்தைகள் அவர் மரித்த போது அவர் நிறைவேற்றின மீட்கும் வேலையை குறிக்காமல், அவர் மீட்கும் விலைக்கிரயத்தை கொடுத்ததை குறிக்கிறது. மத்தியஸ்த ஆளுகையில் கிறிஸ்துவின் முழு வேலையும், அவர் யாருக்கு மீட்கும் விலைக்கிரயத்தைக் கொடுத்தாரோ அவர்களை விடுவிப்பதாகும். இந்த வார்த்தையின் கடைசி பயனாக சபையானது கிறிஸ்துவுடன் உலகத்தை விடுவிக்கும் இந்த மீட்கும் வேலையில் பங்கு பெறும் என்று சொல்லுவது சரியாக இருக்கும். இந்த கருத்துதான் வேத வாக்கியங்களில் நமக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மீட்கும் விலைக்கிரயத்தில் சபையானது பங்கு பெறுகிறது என்று கூறுவது தவறாக இருக்கும். மீட்கும் விலைக்கிரயம் பரிபூரண மனிதராகிய இயேசு ஆகும். அவர் எல்லாருக்குமான மீட்கும் பொருளைக் கொடுத்தார். அந்த பலியில் ஆதாமின் சந்ததியினர் அனைவருக்கும் போதுமான புண்ணியம் இருக்கிறது. சபையானது மீட்கும் வேலையில் அல்லது மீட்கும் பொருள் உபயோகப்படுத்தப்படுபவர்களை மீட்கிற வேலையில் ஈடுபட்டாலும் மீட்கும் பொருளை கொடுக்கிற வேலையில் பங்கு பெறாது.

தகப்பனாகிய ஆதாமுக்கு கொடுக்கப்பட்ட மரண தண்டனை அவரது பிள்ளைகள் அனைவருக்கும் இயற்கையான முறையில் செல்கிறது. இந்த சுவிசேஷ யுக முடிவில் மகா பிரதான ஆசாரியர் அவரது பிராயச்சித்த வேலையை முடிப்பார். பிறகு உலகத்தின் சார்பாக மீட்கும் பொருளை உபயோகித்து அவர் முதலீடு செய்திருந்த உரிமைகளையும் அந்தஸ்துகளையும், மனுக்குலத்திற்கும், உலகத்திற்கும் கொடுப்பார். மனுக்குலத்திற்கும் அவர்களது குடியிருப்புக்கும் முழு விலைக்கிரயமும்

கொடுக்கப்பட்டு, சர்வ வல்லவரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகு, உலகமும் அதன் நிறைவும் கிறிஸ்துவிடம் திரும்பும். அதன்பிறகு அவர் ராஜாதி ராஜாவாகவும் கர்த்தாதி கர்த்தராகவும் இருப்பார். நீதியானது மனுக்குலத்தின் மேல் உரிமை எதுவும் கோராது, அவர்கள் அனைவரும் கிறிஸ்துவினிடத்தில் திரும்பியிருப்பார்கள். தேவனுடைய ஏற்பாடுகளுக்கு எதிரான மனப்பாங்கு உடையவர்களை அவர் அங்கீகரிக்கமாட்டார்.

எனினும் அப்படிப்பட்டவர்கள், தெய்வீக நீதியின் கீழ் கட்டுக்குள் வைக்கப்படுவார்கள். ஏனெனில் மகா மத்தியஸ்தர் தெய்வீக நீதிக்கும் தெய்வீக இரக்கத்திற்கும் பிரதிநிதியாக இருப்பார். அவரது ராஜ்யத்தில் மனுக்குலத்திற்கு ஒரு பெரிய பாடத்தை போதிப்பது கடமையாகவும், உரிமையாகவும் இருக்கும். தீர்க்கதரிசனங்கள் ஒன்றில் நாம் இப்படியாக வாசிக்கிறோம்: “நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள். ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்.” (ஏசாயா 2:3; மீகா 4:2) எருசலேமுக்கு வராத வம்சத்தினர் ஆசீர்வாதத்தை பெறமாட்டார்கள் என்கிற கட்டளை நிறைவேறும். (சகரியா 14:17-19)

வேறு வார்த்தையில் சொல்லுவோமானால், ஆயிரம் வருட ராஜ்யம் முழுமையாக ஸ்தாபிக்கப்படும் போது, அதன் ஆசீர்வாதங்கள், தெய்வீக பிரமாணங்களை அனுசரிக்க நாடுகிறவர்களுக்கு மட்டுமே கிடைக்கும். தெய்வீக பிரமாணத்தை கைக்கொள்ளுகிறதை தவிர ஆசீர்வாதத்தை பெற வம்சங்களுக்கு வேறு வழி இல்லை. அப்படிச் செய்ய அவர்கள் போதிக்கப்படுவார்கள். ஏற்ற காலத்தில் கர்த்தரின் அறிவின் வெளிச்சம் பூமி முழுவதையும் நிரப்பும். தெய்வீக ஞானத்தினால் அறியாமையும் மூட நம்பிக்கையும் நீக்கப்படும். இது புது உடன்படிக்கை இஸ்ரயேலுடனும் சகல மனுக்குலத்துடனும் செய்யப்படும். இவர்களும் இஸ்ரயேலராவார்கள். ஏனெனில் தேவன் புறஜாதிகளையும் மேசியாவிடம் கொடுப்பார். அவரது அரசாங்கத்தை ஏற்றுக்கொண்டவர்களுக்கு மாத்திரமல்ல , பூமியனைத்திற்கும் அவர் ராஜாவாக இருப்பார். “என்னைக் கேளும். அப்பொழுது ஜாதிகளை உமக்கு சுதந்தரமாக கொடுப்பேன்.” சகல மனுக்குலமும், தெய்வீக பிரமாணத்தை கற்றுக் கொள்ளவும் தெய்வீக ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ளவும் அவர் இருப்புக்கோலால் அரசாளுவார். (சங்கீதம் 2:6-12)